OS. 39/2014

**நாள். 21.12.2022.**

**வா.சா. 3 –** பாலசுப்பிரமணியன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு 2ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்....

2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1ம் வாதி வீரபாண்டியன் தான் என்னை சாட்சி சொல்ல நீதிமன்றத்திற்கு அழைத்து வந்தார். 1ம் வாதி வீரபாண்டியனும் நானும் ஒரே சமுதாயத்தை சார்ந்தவர்கள் என்றால் சரிதான். உயில் பத்திரத்தின் அசலை வீரபாண்டியன் என்னிடம் காண்பித்தார். அந்த உயில் பத்திரம் பதிவு செய்யப்பட்ட விவரம் எனக்கு தெரியாது. 23.05.1960ல் உயில் பதிவு செய்தபோது எனக்கு 10 வயது ஆனது. உயில் எழுதப்பட்ட சமயத்தில் யார் உயில் பத்திரத்தை எழுதியது மற்றும் யார் யார் உயில் பத்திரத்தில் கையெழுத்து போட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. நான் வெண்ணீர்வாய்க்கால் கிராமத்தில் எனது தகப்பனாரோடு வசித்து வந்ததற்கு என்னிடம் ஆவணம் இல்லை. 1984ம் ஆண்டிலேயே நான் வெண்ணீர்வாய்க்காலை விட்டு வெளியேறிவிட்டேன். முத்துவெயிலு சேர்வை 1986ல் இறந்துவிட்டார். முத்துவெயிலு சேர்வையின் வீட்டிற்கு பக்கத்தில் எங்கள் வீடு 2 வீடு தள்ளி உள்ளது. பரமக்குடி – முதுகுளத்தூர் செல்லும் வெண்ணீர்வாய்க்கால் ரோடு தென்வடல் ரோடு ஆகும். அந்த தென்வடல் ரோட்டிற்கு கிழக்குப்பக்கம் முத்து வெயிலு வீடும் எங்கள் வீடு ரோட்டிற்கு கிழக்குப்பக்கமும் உள்ளது. எங்கள் வீடு முத்துவெயிலு வீட்டிற்கு அருகில் இருக்கிறது என்றும் ரோட்டிற்கு கிழக்கில் இருக்கிறது என்றும் நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் 1980ல் நடந்தது. நான் கலப்பு திருமணம் செய்துள்ளேன். நான் திருமணம் முடிந்த உடனேயே ஊரில் பிரச்சனை ஏற்பட்டு திருமணத்துடனேயே ஊரைவிட்டு வெளியேறிவிட்டேன் என்றால் சரிதான். நான் சொல்வதுபோல முத்துவெயிலு 1986 ல் இறந்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. முத்துவெயிலு சேர்வையை எனக்கு நன்றாக தெரியும் என்று சொல்வதும் பொய் என்றால் சரியல்ல. முத்துவெயிலு சேர்வையின் கையெழுத்து போட்ட ஆவணங்களை நான் நேரடியாக கையெழுத்து போடும்போது பார்த்ததில்லை. முத்துவெயிலு சேர்வையின் கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும் என்று சொல்வது

பொய் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரின் கையெழுத்து எனக்கு நன்றாக தெரியும் என்று நான் சொல்வது பொய் என்றால் சரியல்ல. எங்கள் வீடும் முத்துவெயிலு சேர்வையின் வீடும் அருகில் இருக்கிறது என்று சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதி வீரபாண்டியன் என்னை அழைத்துவந்து அவர் சொல்லிய விவரங்களின் அடிப்படையில் நிரூபணவாக்குமூலம் தயார் செய்து தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். நிரூபணவாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள முத்திருளப்பன் மகன் குமரகுரு, உள்ளிட்ட 6 நபர்களை எனக்கு தெரியும். சுப்பிரமணிய பிள்ளை பற்றி தெரியாது. நிரூபணவாக்குமூலத்தில் நான் சொல்லியுள்ள நபர்களை எனக்கு தெரியாது என்றும் வாதிகள் குறிப்பிட்டு நிரூபணவாக்குமூலத்தில் சொல்லப்பட்டிருப்பதால் அவர்களை பற்றி தெரியும் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்லும் 1960 உயிலில் சாட்சிகளாக கையெழுத்து போட்ட நபரைகளை எனக்கு தெரியாது என்றும் வாதிகள் சொல்லிக்கொடுத்து தற்போது மேற்படி ஆவணத்தில் சாட்சிகளாக கையெழுத்து போட்டவர்களை தெரியும் என்றும் பொய் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. இராமையா சேர்வை மகன் கிருஷ்ணன் சேர்வை இன்னார் என்று நிரூபித்தவர் என்று சாட்சியாக கையெழுத்து செய்திருக்கிறார் என்றும் சொல்வது பொய் என்றால் சரியல்ல. வாதிகள் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபணவாக்குமூலத்தில் கண்டுள்ள விவரங்கள் பொய்யானவை என்று சொன்னால் சரியல்ல. உயில் அசல் ஆவணத்தை நான் பார்த்ததாக சொல்வது பொய் என்றால் சரியல்ல.

<u>1, 5, 6 முதல் 12 மற்றும் 15 ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்கண்ட 2ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.